# தமிழீழமே தமிழர்களின் முடிவு

## நெதர்லாந்து



வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான கருத்துக்கணிப்பானது நெதர்லாந்தில் 15 வாக்குச்சாவடிகளில் நடைபெற்றது. இவ்வாக்கெடுப்பில் நெதர்லாந்தில் வாழும் 80 வீதத்திற்கும் அதிகமான தமிழீழ மக்கள் வாக்களித்திருந்தனர். இதில் கண்காணிப்பாளர்களாக நெதர்லாந்து அரசுத் தேர்தல்களின் கண்காணிப்பாளர்கள், நெதர்லாந்தின் பூர்வீகக்குடிகளும் கடமையாற்றியிருந்தனர். இங்கு மொத்தமாக 2750 வாக்குகள் பதிவாகியிருந்தன. இதில் சுதந்திரத் தமிழீழத் தனியரசை ஆதரித்து 2728 வாக்குகளும் தனியரசை எதிர்த்து 9 வாக்குகளும், 13 வாக்குகள் செல்லுபடியற்றவையாகவும் பதிவுசெய்யப்பட்டிருந்தன. எனவே, 99.2 வீதமான தமிழ் மக்கள் சுதந்திரத் தமிழீழத் தனியரசை அமைப்பதே தமது விருப்பம் என தமது கருத்தை இத் தேர்தலில் பதிவு செய்துள்ளனர்.

## ஜேர்மனி



ஜேர்மனி முழுவதும் நடைபெற்ற வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் மீதான மீள் வாக்குகணிப்பில் 99,2 வீதமான யேர்மன் வாழ் தமிழ் மக்கள் இறைமையுள்ள தனித் தமிழீழ அரசினை நிறுவுவதற்கு தமது விருப்பத்தை தெரிவித்துள்ளனர். ஜேர்மனி முழுவதும் வாக்களித்த 23,089 வாக்காளர்களில் 22,904 வாக்காளர்கள் தனித் தமிழீழ அரசினை நிறுவுவதற்கு ஆம் என்றும் 136 வாக்காளர்கள் இல்லை என்றும் 49 வாக்குகள் செல்லுபடியாகாத வாக்குகளாகவும் பதிவாகியுள்ளன.



## சுவிஸ்

சுவிசில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீதான மீள் வாக்கெடுப்பில் 99.49 வீதமான மக்கள் தமிழீழம் தான் ஒரே தீர்வு என வாக்களித்துள்ளனர். மீள் வாக்களிப்புத் தேர்தலில் 16,441 பேர் கலந்துகொண்டுள்ளனர். இதில் தமிழீழத் தனியரசை நிறுவுவதற்கு 16,358 பேர் ஆம் என வாக்களித்துள்ளனர். இல்லை என 32 பேர் வாக்களித்துள்ளனர். செல்லுபடியாகாத வாக்குகளாக 51 வாக்குகள் பதியப்பட்டுள்ளன.



# மறக்க முடியுமா..?



தன் இனம் அழிவதைக் கண்டு பொறுக்க முடியாமல் பொங்கியெழுந்த எரிமலை எங்கள் முத்துக்குமார் இவன். கரும்புலிகளை விட ஒருபடி மேலே வைத்து தலைவரால் நேசிக்கப்படும் மாவீரன். தன் இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்த தன்னையே நெருப்பாக்கிய அக்னிச் சுடர். ஆண்டு ஒன்றாவிட்டது இந்த மாமனிதன் மறைந்து... ஆனாலும் ஈழத் தமிழனின் வரலாற்றுப் பக்கங்களிலும், உணர்வுள்ள தமிழினின் மனங்களிலும் என்றென்றும் வாழும் உயிரோவியம் எங்கள் முத்துக்குமார்.



சிங்களப் பேரினவாதத்தின் மனித குலத்திற்கு எதிரான படுகொலையில் எத்தனை குழந்தைகளை நாங்கள் இழந்துவிட்டோம். கணக்கிட்டாலும் கணக்கிடமுடியாதவை எங்கள் குழந்தைகளின் இழப்பு. ஏன் சாகின்றோம், ஏன் கொல்கின்றார்கள் என்பது கூடத் தெரியாமல் பலியாகிப்போன எங்கள் குழந்தைகளுக்கு, பயங்கரவாத்திற்கு எதிரான போரை வழிநடத்திய இந்த உலகம் என்ன பதில் சொல்லும். 23.01.2009 அன்று நடந்த இனப்படுகொலையில் உயிரைவிட்ட எங்கள் பிஞ்சுக் குழந்தைகள் இவர்கள்.

